| | | |
|---|---|---|
| O.S No. | : | 125/2021 |
| DATE | : | 16.07.2025 |
| NAME | : | பூமிநாதன் |
| Father's Name | : | ஏழுமலை |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை**

1. எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லியதன் பெயரில் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். வழி வேண்டும் என்று பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கின் 1ம் பரிகாரம் B அட்டவணை சொத்து எனக்கு சொந்தமானது என்று கோரியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. B அட்டவணை சொத்து பிரதிவாதிகள் கோவிலுக்கு சொந்தமானது. வா.சா.ஆ.1 வரைபடத்தில் உள்ள E, F, G, H என்று குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண். 205/1C கோவிலுக்கு சொந்தமானது. அந்த B அட்டவணை சொத்தை பிரதிவாதி கோவில் கிரையம் பெற்றுள்ளது. மேற்படி வழக்கானது FHBI என்பது பிரதிவாதி கோவிலின் சர்வே எண் 204 யுடன் சேர்ந்தது என்றால் சரிதான்.

2. எனது சொத்திற்கு வடக்கு பக்கத்தில் சர்ச் அமைந்துள்ளது. E, F, G, H ற்கு வடக்கில் உள்ள சர்வே எண் 205/1B எனக்கு பாத்தியப்பட்டதா என்றால் இல்லை. FIBH பகுதிக்கு தெற்கில் தான் எனது வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு அருகில் கணேசன் வீடு இல்லை, இடம் உள்ளது. A அட்டவணையில் மேற்கில் கணேசன் வீடு இருப்பதாக நான் குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வடக்கில் காம்பவுண்ட் சுவர் (BH ) நிரப்பப்பட்டுள்ளது.

3. நான் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 57/2018 இந்த வழக்கின் பிரதிவாதிகள் தரப்பினர்கள் கிடையாது. மேற்படி வழக்கில் நான் சொல்லும் வழியை பயன்படுத்தி வருவதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் E, F, G, H பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து என்று ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால்

சரிதான். B அட்டவணை சொத்திற்கு பட்டா பிரதிவாதிகள் பெயரில் உள்ளது. மேற்படி வழியை பிரதிவாதிகள் பொது வழியாக யாரிடமும் ஒப்படைக்வில்லை என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். E, F, G, H இடத்தில் தான் கோவிலின் குடிநீர் வசதி மற்றும் மின்சார வசதிக்கான பைப்லைன் வருகிறது என்றால் சரிதான் எனக்கும் அங்கிருந்து தான் வருகிறது. அதற்கான சாட்சியம் கொடுத்துள்ளேன். நான் சொல்வது மாதிரி சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிய்ல்ல.

4. நான் தாக்கல் செய்துள்ள அ–பதிவேடுளிலும் B அட்டவணை சொத்திற்கு பிரதிவாதிகள் உரிமையாளர்கள் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. சர்வே எண் 204யை சர்ச் தான் அனுபவித்து வருகிறது என்று சொன்னால் சரிதான், நானும் வழியாக அனுபவித்து வருகிறேன். B அட்டவணை சொத்தை வழியாக நான் அனுபவிப்பதற்கு பிரதிவாதிகளிடம் ஏதாவது அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் 3 தலைமுறைகளாக அனுபவித்து வருகிறோம். வழியை அனுபவிக்க தடை செய்த போது நாங்கள் ஆட்சியரிடமோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்போ அனுப்பி உள்ளோமா என்றால் இல்லை, வழக்கு தாக்கல் செய்தோம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 நான் சொல்வது மாதிரி E,F,G,H என்று தனிப்பட்டு குறிப்படவில்லை என்றால் சரிதான். அதே மாதிரி 205/1C ல் நான் குறிப்பிடும் பகுதியை மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ–1 வரைபடத்தில் உள்ள பிரதான சாலையானது வடக்கு தெற்காக மேற்கு பக்கம் செல்கிறது. நான் அந்த வழியாக தான் எனது வீட்டிற்கு சென்று வருகிறேன். B அட்டவணை சொத்தானது சர்ச்சிற்கு முழுமையாக பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் அதனை பாதுகாப்பு கருதி பிரதிவாதிகள் தான் பராமரித்து கவனித்து வருகிறார்கள் நான் சொல்வது மாதிரி எக்காலத்திலும் அதனை யாரும் வழியாக பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 204ல் காம்பவுண்ட்

சுவர் எதுவும் எழுப்பப்படாமல் பிரதிவாதிகள் முழுவதாக அனுபவித்து

வருகிறார்கள் காம்பவுண்ட் சுவர் எழுப்பி கேட் போட்டு பிரதிவாதிகள் தடை செய்தததாக தவறாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல, நாங்கள் பொது மக்கள் உதவியுடன் அதை அகற்றியதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–1 வரைபடம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. B அட்டவணை சொத்தானது பிரதிவாதிகளுக்கு சொந்தமான தனியார் சொத்து அதை அனுபவிக்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6. சர்ச்சிற்கு தெற்கில் உள்ள எனது வீட்டிற்கு பிரதான சாலை மூலம் செல்வதற்கு வேறு வழி உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் கோருவது போல் தாவா சொத்தில் எனக்கு எந்த ஈஸ்மண்ட்ரி உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கு எந்த முகாந்திரமும் கிடையாது, ஆகவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது.**

(Tmt.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.